**தலைவரின் செய்தி**

அன்புள்ள பங்குதாரருக்கு,

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளானது 2022 ஆம் ஆண்டில் அசாதாரண சவால்களை எதிர்கொண்டு, சந்தைப் பங்கில் வளர்ச்சியையும், நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில் இலாபத்தையும் பெற்றுக் கொடுப்பதற்கு இரண்டு புதிய பிரதான நிறைவேற்று அதிகாரிகளின் தலைமையிலான இளம் குழுவின் அசைக்க முடியாத வெற்றி மனப்பான்மைக்கு ஒரு சான்றாகும். HNB அஷ்யூரன்ஸ் PLC மற்றும் அதன் துணை நிறுவனமான HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட் ஆகியவை புதிய வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிக்கும் அதே வேளையில், காப்புறுதித் தொழில்துறை வளர்ச்சியையும் தாண்டிய வலுவான மற்றும் முழுமையான செயல்திறனை வழங்கியுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**எதிர்பார்க்காத நிச்சயமற்ற நிலை**

இந்த ஆண்டானது ஏற்படவுள்ள வெளிநாட்டு நாணய பணப்புழக்க நெருக்கடியுடனும் 14% பணவீக்க ஏற்றம், எரிவாயு மற்றும் பிற பொருட்களின் பற்றாக்குறையுடனும் தொடங்கியது. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு ஆகியவை மக்களுக்கு நெருக்குதல்களை ஏற்படுத்தியதனால், முதல் காலாண்டில் தோற்றுவிக்கப்பட்ட அழுத்தமானது நாடளாவிய சமூக அமைதியின்மையின் உச்சக்கட்டத்தை அடைந்தது. உணவுத் தட்டுப்பாடு ஆண்டு முழுவதும் முக்கிய கவலையாக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் 25% இல் தொடங்கி, 2022 செப்டம்பரில் அது 94.9% ஆக உயர்ந்தது. இதனால் குடும்ப வரவு செலவுத் திட்டங்களில் பல சிரமங்கள் ஏற்பட்டதுடன், பாதுகாப்பு நிதிகளைச் சேமிப்பதற்கான அல்லது உருவாக்குவதற்கான அவர்களின் திறனைம் இது குறைக்கின்றது. இந்த ஆண்டில் எரிசக்தி மற்றும் எரிபொருள் மானியங்கள் படிப்படியாக திரும்பப் பெறப்பட்டதுடன் உணவு அல்லாத பணவீக்கத்தின் மீது பெரும் அழுத்தத்தையும் ஏற்படுத்தியது மட்டுமன்றி அதனை அதிகரிக்கவும் செய்தது.

நாட்டின் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகள், நாணயக் கொள்கையை இறுக்குவது உட்பட பல கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த வழிவகுத்தது. ஏப்ரல் 2022 இல் கொள்கை வட்டி விகிதங்கள் 700 அடிப்படைப் புள்ளிகளால் மேல்நோக்கி திருத்தப்பட்டன. , இது பணவீக்கம் மற்றும் ஒப்பந்தத் தேவையைக் கட்டுப்படுத்துவதற்காக ஆண்டில் 900 அடிப்படைப் புள்ளிகளைச் சேர்க்கப்பதன் மூலம் வரலாற்றில் மிகக் கடுமையான உயர்வாக இருக்கின்றது. மார்ச் 2022 இல் 46% கூர்மையான மதிப்பிழப்புடன் ஆரம்பித்து, இந்த ஆண்டில் இலங்கை ரூபாயின் மதிப்பு 82% வரை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. ஏப்ரல் 2022 இல், கடன் நிலைகள் நீடிக்க முடியாததால், இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்தியது, இதன் விளைவாக இறையாண்மைக் கடன் மதிப்பீட்டில் மேலும் சரிவு ஏற்பட்டது. செப்டம்பர் 2022 க்குள் 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தில் 2.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் திட்டத்தில் IMF உடன் அரசு பதவி அணி மட்டத்தில் (staff level) ஓர் ஒப்பந்தத்தம் எட்டப்பட்டது. நாட்டின் பொருளாதார மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கு முக்கியமானதாக இருக்கும் வசதியைத் தோற்றுவிப்பதற்காக 35 பில்லியன் அமெரிக்க டாலர் கடனை மறுசீரமைக்க முறையான உத்தரவாதங்களைப் பெறுவதற்கு அரசாங்கம் அனைத்து இருதரப்பு, பலதரப்பு மற்றும் வணிக கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. வளக் கட்டுப்பாடுகள், நிச்சயமற்ற தன்மை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஆகியவற்றின் பின்னணியில், 2022 இல் பொருளாதாரம் 9.2% ஆக சுருங்கியது.

பலவீனமடைந்துவரும் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் பின்னணியில் இலங்கையின் பொருளாதாரச் சீர்கேடுகள் அதிக அளவிலான கடன்களைக் கொண்ட ஏனைய நாடுகளுக்கு மணிக்கொடியாகக் கருதப்படுகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஏற்றுமதிக்கான தேவையால் மீட்சி பாதிக்கப்படும் என்பதுடன், இது தொடர்ந்து உயர்ந்த பணவீக்கம் மற்றும் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதட்டங்களால் பாதிக்கப்படுவதனால் இவை இந்த வருடத்தில் பாரதூரமான விடயங்களாகக் கருதப்பட்டன.

## வெளிப்படுகிற வ◌ாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

வெளிப்படும் நிச்சயமற்ற நிலை, வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் இரண்டும் கணிசமான அளவில் இருந்ததால், அழுத்தமான பொருளாதாரத்தில் காப்புறுதித் துறையின் பொருத்தத்தை மறுபரிசீலனை செய்வதற்கான நேரமாக இருந்தது. தொற்றுநோயுடனான அனுபவத்தின் பின்னணியில், உயர்ந்த நிச்சயமற்ற தன்மையுடன், பாதுகாப்பு அரண்களை உருவாக்க விரும்பும் விவேகமான வாடிக்கையாளர்களிடையே ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பூடுகளுக்கான தேவை அதிகரித்தது. இதன் மூலம் ஏற்பட்ட பின்னடைவு

என்னவென்றால், செயலிழப்பு வீதத்தின்(Lapse Ratio) அழுத்தம் காரணமாக பிற பிரிவுகள் தங்கள் கட்டுப்பணத்தைத் தொடர்ந்து செலுத்த முடியாமல் போனதாகும். அந்நியச் செலாவணி பணப்புழக்க நெருக்கடியும் கணிசமான சவால்களை ஏற்படுத்தியது. ஏனெனில் மறுகாப்புறுதிக் கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தும் திறன் தடைபட்டது. அதே நேரத்தில் இறையாண்மைக் குறைப்புகளின் விளைவாக சில மறுகாப்புறுதிக் கம்பனிகள் சந்தையில் இருந்து வெளியேறின. மார்ச் 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதி மீதான தடை, தொடர்ந்து 3வது ஆண்டாக பொதுக் காப்புறுதி(General Insurance) வியாபாரத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து தடை செய்தது. பணவீக்க அழுத்தங்களுக்கு பங்களிப்புச் செய்த மசகு எண்ணெய் மற்றும் பிற இறக்குமதிகளின் பரவலானவிளைவு (knock-on effect) தவிர, ரூபாய் மதிப்பிழப்பு மோட்டார் காப்புறுதின் கீழ் இழப்பீட்டுக் கோரிக்கைகளின் செலவுகளை அதிகரித்தது. பணவீக்கம் மற்றும் அதிகரித்த வரிவிதிப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவுகளை எளிதாக்குவதற்கான தீர்வுகளை நாம் தேட வேண்டியதன் காரணமாக, வரவு-செலவுத் திட்டங்களைக் குறைக்கும் அதே போல் திறமையான பயிற்சி பெற்ற ஊழியர்களின் அதிகளவிலான இடப்பெயர்வை எதிர்கொள்வதற்கும், அதிக சேவை மிகுந்த வியாபாரம் முழுவதும் திறமை முகாமை தொடர்பான உயர் மட்டங்களுடன் ஒருங்கிணைந்த சமூக மற்றும் மெக்ரோ பொருளாதார அழுத்தங்கள் வழிவகுத்தன. அதிகரித்து வரும் சவால்களுக்கு மத்தியில், வாய்ப்புகளின் பயன்பாடுகள் தொடர்ந்தும் இருந்தன, அவற்றை அடையாளம் கண்டு, இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான உத்திகள் வெற்றிக்கு முக்கியமாகும்.

**வளர்ச்சி, ஸ்திரத்தன்மை மற்றும் இலாபம்**

HNB அஷ்யூரன்ஸ் குழுமமானது, எதிர்பாராத சவால்களுக்கு மத்தியில் ஒரு முழுமையான செயல்திறனை வழங்கி, அதன் மிக வெற்றிகரமான ஆண்டுகளில் ஒன்றைப் பதிவு செய்தது. இது HNBA மற்றும் HNBGI ஆகிய இரு நிறுவனங்களும் 5 ஆண்டுகளில் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டிலும் முன்னணிக் காப்புறுதிக் கம்பனிகளாக வளரும் முக்கிய நோக்கத்துடன் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையை உருவாக்கப் புறப்பட்டபோது, அவற்றிலும் மூலோபாயச் செயல்பாட்டினால் உந்தப்பட்டது. அதன்படி, குழுமமானது வரிக்கு முந்தைய இலாபமாக 36% வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் இது கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளில் மொத்த எழுதப்பட்ட பிரீமியம் GWP வளர்ச்சியில் கூர்மையான கவனம் செலுத்துவதன் மூலம் உந்துதல் மற்றும் வட்டி விகிதங்களின் செங்குத்தான அதிகரிப்பால் ஆதரிக்கப்படும் வருமானத்தை அதிகரித்தது. அதன்படி, இரு நிறுவனங்களும் தொழில் விதிமுறைகளையும் தாண்டி அதிக GWP வளர்ச்சியை அடைய முடிந்தது. குழுமத்தின் GWP யானது 24% வளர்ச்சியுடன் ரூ. 15 பில்லியன் இலக்கை அடைந்துள்ளதுடன் இது ஒரு விதிவிலக்கான சாதனையாகும். வட்டி மற்றும் இலாபப் பங்கு வருமானமும் 78% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. உரிமைகோரல்களின் அதிகரிப்பு, பணவீக்கம் மற்றும் பண மதிப்பிழப்பு மற்றும் ஊழியர்களின் நலன் மீதான அக்கறை ஆகியவற்றின் தாக்கத்தை இவை குறைப்பதுடன், இது பணவீக்கத்தை சமாளிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களின் ஆதரவைத் தூண்டியது. 2022 இல் வருமான வரி விகிதங்கள் 24% முதல் 30% வரை அதிகரித்ததன் பாதகமான விளைவுகளுக்குப் பிறகும் வரிக்குப் பிந்தைய லாபம் 50% அதிகரித்து ரூ.1.83 பில்லியனாக இருந்தது. குழுமத்தின் செயல்திறன், தொழில்துறை அளவு மற்றும் சக கம்பனிகளை விடவும் அதிகமாக உள்ளது. இது ஒரு அசாதாரணமான சவாலான ஆண்டில் அவர்களை எதிர்கொண்ட பல சவால்களை சமாளிக்க உத்தி மற்றும் சுறுசுறுப்பை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.

வரையறுக்கப்பட்ட இலங்கை Fitch தரப்படுத்தல் (FitchRatings Lanka Ltd) நிறுவனத்தின் A-(lka) தரச் சான்றிதழுடன் HNB அஷ்யூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகிய இரண்டு கம்பனிகளும் காப்புறுதித் தொழில்துறையில் முதலிடத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், நாட்டின் இடர் மதிப்பீட்டு காரணமாக அவை தொடர்ந்தும் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதுடன், இதன் விளைவாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட மற்ற தொழில்துறை சக நிறுவனங்களுடன் சேர்த்து இவற்றின் தரமதிப்பீடும் தரமிறக்கப்பட்டது. இந்த வருடத்தில் வட்டி விகிதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஏற்ப ஆயுள் காப்புறுதிப் பத்திரதாரர்களின் விற்பனைக்கான கையிருப்பு நிதியமானது எதிர்மறையான ரூபா 67 மில்லியனிலிருந்து எதிர்மறையான ரூபா 1,277 மில்லியன் வரை குறைந்ததால், மெக்ரோ பொருளாதார அழுத்தம் மேற்கொண்டும் மொத்த பங்குகளில் 4% ரூ. 7.79 பில்லியன் சரிவைப் பிரதிபலிக்கின்றது.

HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டின் Capital Adequacy Ratio க்களானது ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் உள்ளக இலக்கு மட்டங்கள் ஆகியவற்றுக்கும் அதிகமானதாகவே காணப்படுகின்றது. பணப்புழக்கம் 2022 இல் ஆரோக்கியமான அளவில் பராமரிக்கப்படுகிறது. இது பணப்புழக்க இடையகங்களை மேம்படுத்த எடுக்கப்பட்ட கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பிரதிபலிக்கிறது.

HNBA வின் பணிப்பாளர்கள் சபையானது 2022 ஆண்டின் முதல் மற்றும் இறுதி இலாபப் பங்குத் தொகையாக ரூ. 3.65 வைப் பரிந்துரை செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.
HNBA 2022 இல் குறிப்பிடத்தக்க செயல்திறனைப் பதிவு செய்ய முடிந்தது. வெளிப்புற சூழலின் அடிப்படையில் வரும் ஆண்டு மிகவும் சவாலானதாக இருந்த போதிலும், HNBA இன் பணிப்பாளர்கள் சபையானது கடந்த ஆண்டை விட 14% அதிகமான இந்த இலாபப் பங்குத் தொகையை எங்கள் அனைத்து பங்குதாரர்களுக்கும் திருப்திகரமான வருமானத்தை வழங்குவதற்கான எங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காக பரிந்துரை செய்துள்ளது.

## விழிப்புணர்வுள்ள பணிப்பாளர்கள் சபை

2022 ஆம் ஆண்டுக்கான விரைவுப் பயணத்தில் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றார்கள் என்பதுடன், HNB அஷ்யூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகிய இரு நிறுவனங்களின் பணிப்பாளர்கள் சபையில் அனுபவம் வாய்ந்த நிதித் துறை வல்லுநர்களை நாங்கள் பெற்றுள்ளோம். இவர்களே இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சமநிலையான செயல்திறனை வழங்குவதற்கு கூட்டாக வணிகத்தை வழிநடத்தியவர்கள்.

HNB அஷ்யூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகிய இரண்டின் பணிப்பாளர்கள் சபைகளும், வியாபார வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை வழங்க, மூலதனம் மற்றும் பணப்புழக்க இடையகங்களை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் அதன் விழிப்புணர்வை அதிகரித்தன. அதன்படி, பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்களில் பணப்புழக்க நிலை மற்றும் Capital Adequacy Ratio விகிதம் மற்றும் அதன் இயக்கங்கள் ஆகியவற்றை வழக்கமான நிகழ்ச்சி நிரலாக பணிப்பாளர்கள் சபை மதிப்பாய்வு செய்தது. HNB ஜெனரல் இன்சூரன்ஸ் ஐப் பொறுத்தளவில், பணப்புழக்கத்தின் அளவுகள் குறைந்தால், பண அழைப்பின் (cash call) கூடுதல் வசதியை பணிப்பாளர்கள் சபை குறிப்பிட்டதாயினும் வருடத்தில் பராமரிக்கப்பட்ட ஆரோக்கியமான பணப்புழக்க அளவுகள் காரணமாக இதற்கு எந்த அவசியமும் இல்லை.

பங்குதாரர்களின் மாறிவரும் தேவைகளை குழுமத்தின் குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட கால முன்னுரிமைகளுடன் சமநிலைப்படுத்தி எங்கள் பங்குதாரர் மதிப்பு முன்மொழிவுகள் வலுவாக இருப்பதை உறுதிசெய்யும் ஒரு போக்கை வழிநடத்துவதற்காக வேண்டி வியாபாரத்தின் ஸ்திர நிலைத்தன்மையிலும் பணிப்பாளர்கள் சபை கவனம் செலுத்தியது. வியாபார வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்கு அதிக அளவு வாடிக்கையாளர் ஈடுபாடு தேவைப்படும் ஒரு துறையில் இது மிகவும் முக்கியமானது. பொறிமுறையானது, பங்குதாரர்களுக்கு மதிப்பை வழங்குவதற்கான வழிமுறைகள், சேவை நிலைகளை மேம்படுத்தவும், எங்கள் நற்பெயரையும் வணிக சின்னத்தையும் கட்டியெழுப்ப நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மயமாக்கலானது தொடர்ந்து பணிப்பாளர்கள் சபையின் முன்னுரிமையாக உள்ளதுடன், HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டிற்கும் மேம்படுத்தப்பட்ட முக்கிய காப்பீட்டு அமைப்புகளை செயல்படுத்த பணிப்பாளர்கள் சபை அங்கீகாரம் அளித்துள்ளது. இவை செயல்பாடுகளின் அளவிடுதல் மற்றும் குழு அளவிலான செயல்திறன் மற்றும் சிறந்த பகுப்பாய்வு மூலம் எங்கள் வியாபாரத்தைப் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளை ஆதரிக்கும். 2023 இல் செயல்படுத்தப்பட்டு அதன் அனுகூலங்கள் 2024 க்குள் தொடங்கும் என எதிர்பார்க்கிறோம்.

## IFRS 17 க்கான தயார்நிலை:

காப்பீட்டு ஒப்பந்தங்கள் மற்றொரு முக்கிய பகுதியாகும். இதில் பணிப்பாளர்கள் சபை தேவையான மாற்றங்களை வழிநடத்துகிறது. மேலும் 2025 க்குள் நாங்கள் இதை செயல்படுத்த தயாராக இருக்கிறோம்.

பணிப்பாளர்கள் சபையின் துணைக் குழுக்கள், மேற்பார்வையின் முக்கிய பகுதிகள் மீதான முன்னோக்குகளைப் புதுப்பிக்க, துணைக் குழு மற்றும் பணிப்பாளர்கள் சபை விவாதங்களில் புதிய ஆற்றலைக் கொண்டு வருவதற்காக மறுசீரமைக்கப்பட்டன பொருளாதாரம், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) அம்சங்கள் வரவிருக்கும் ஆண்டில் முக்கிய கவனம் செலுத்தும் பகுதியாக இருக்கும். மேலும் இந்த முக்கிய அம்சங்களை நிறுவனமயமாக்குவதற்கான போக்கு வரைபடம் மற்றும் ESG மூலோபாயத்தை உருவாக்குவதன் மூலம் குழுவின் ESG நிகழ்ச்சி நிரலை பணிப்பாளர்கள் சபை இயக்கும்.

## மனநிலைச்சார்பு

IMF வசதி இன்னும் கிடைக்காததால் 2023 வரை நிச்சயமற்ற நிலை தொடர்கிறது. இருப்பினும் இது சம்பந்தமாக முன்னேற்றம் உள்ளது. ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், நாட்டில் வணிக நம்பிக்கையை மேம்படுத்தவும் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாக இருக்கும். சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சி மற்றும் தொழிலாளர்கள் பணம் அனுப்புவதில் தொடர்ந்து அதிகரிப்பு ஆகியவை 2023 ஆம் ஆண்டுக்கான வாய்ப்புகளை நன்றாகக் காட்டுகின்றன. முக்கிய அந்நியச் செலாவணி வரவுக்கான முக்கிய ஆதாரமாக ஏற்றுமதி தொடர்கிறது மற்றும் உலகப் பொருளாதாரத்திற்கான மிதமான கண்ணோட்டம் இருந்த போதிலும் 2023 இல் வளர்ச்சி வேகம் தொடர வேண்டியுள்ளமது. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பணவீக்கம் குறையும் என இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. இருப்பினும் அதிகரித்த எரிசக்தி விலைகளால் மேல்நோக்கிய அழுத்தம் இருக்கும். இது இந்த முக்கிய குறிகாட்டியைக் கட்டுப்படுத்த அமுல்படுத்தப்படும் மற்ற நடவடிக்கைகளின் மீது எடைபோடலாம். 2023 இல் பொருளாதாரம் மேலும் 4.2% மாகச் சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சிப் பாதைக்குத் திரும்புவதற்குத் தேவையான கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் நாட்டிற்கு ஒரு நீர்நிலை ஆண்டாகத் (watershed year) தோன்றும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

HNB அஷ்யூரன்ஸ் குழுமமானது வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்து எச்சரிக்கையுடன் நம்பிக்கையுடன் உள்ளதுடன் குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு அர்த்தமுள்ளதாக இருக்கும் வாய்ப்பைக் கண்டறிய தீர்மானித்துள்ளது. இந்த நிறுவனங்கள், தொழில்துறையில் அடுக்கு 2-ல் தங்கள் வலுவான தலைமைத்துவ நிலை, நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அவர்களின் தாய் நிறுவனமான ஹட்டன் நெஷனல் வங்கியின் பலத்தை மேம்படுத்தும் வகையில், அடுக்கு I வரை நிலைக்குச் செல்லும் வகையில் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு வியாபாரங்களுக்காகவும் வகுக்கப்பட்ட உத்திகள், அவற்றின் தெளிவான உச்சரிப்பு மற்றும் வழங்கப்பட்ட முன்னேற்றம் ஆகியவை இந்த நடுத்தர கால இலக்கை வழங்குவதற்கான குழுமத்தின் திறனில் நியாயமான நம்பிக்கையை கொண்டுள்ளது.

**பாராட்டுக்கள்**

2022 அக்டோபரில் பணிப்பாளர் சபையில் இருந்து ஓய்வுபெற்ற திருமதி சிரோமி விக்கிரமசிங்க, HNBA கம்பனிக்கு தனது ஒன்பது வருட சேவையை நிறைவுசெய்து நிறுவனத்திற்கு அவர் அளித்த அசைக்க முடியாத ஆதரவிற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கையின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக பதவியேற்பதற்காக, HNBGI பணிப்பாளர் சபையிலிருந்து விலகிய திரு. பைசல் சாலிஹ் அவர்களின் எதிர்கால முயற்சிகள் சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்துகிறேன். ஏறக்குறைய 9 ஆண்டுகளாக பணிப்பாளராக அவர் ஆற்றிய மதிப்புமிக்க பங்களிப்பிற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டிலும் உள்ள ஊழியர் குழாமின் உத்வேகத்தை நான் பாராட்டுகிறேன். இது சமமான கட்டுப்பாடற்ற வியாபாரச் சூழலில் சவால்களை ஒன்றாகச் சேர்ந்து சமாளித்த வண்ணம் வியாபார வளர்ச்சியை வழங்குவதற்கு அவர்களைத் தூண்டியது. தமது கடமைப் பொறுப்புக்களில் முதலாம் ஆண்டில் கடமையாற்றுகின்ற புதிய பிரதான நிறைவேற்று அதிகாரிகளின் விரிவான உத்திகளையிம் பகுப்பாய்வு அணுகுமுறையையும் கையாண்டார்கள். எங்கள் முக்கிய பங்குதாரர்களின் தொடர்ச்சியான நம்பிக்கையை நாங்கள் வெகுவாகப் பாராட்டுகிறோம், மேலும் எங்கள் அபிலாஷைகளை நனவாக்கும் நோக்கில் நாங்கள் பயணிக்கும்போது வழங்கப்படும் மதிப்பை மேம்படுத்த உறுதிபூண்டுள்ளோம். நிதித்துறையின் இந்த முக்கிய பிரிவை அபிவிருத்தி செய்வதற்கும் நிலைநிறுத்துவதற்கும் எங்களுடன் இணைந்து பணியாற்றும் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு நான் நன்றி கூறுகின்றேன். 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட முழுமையான செயல்திறனுக்கு விலைமதிப்பற்ற பங்களிப்பாளர்களாக இருந்த இரு நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

ரோஸ் குரே
தலைவர்

கொழும்பு, இலங்கை
17 பிப்ரவரி 2023

## பிரதான நிறைவேற்று அதிகாரியின் மதிப்பாய்வு

அன்புள்ள பங்குதாரருக்கு,

HNB அஷ்யூரன்ஸ் PLC ஆனது, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிப் பிரிவு ஆகிய இரண்டிலும் ஒவ்வொரு மட்டத்திலும் எதிர்பாராத சவால்கள் நிறைந்த ஒரு வருடத்தில் சந்தைப் பங்கில் கவர்ச்சிமிக்க வருமானத்தைப் பதிவுசெய்து, குழுமத்தின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த ஓர் ஆண்டைப் பதிவுசெய்துள்ளது. ஆயுள் காப்புறுதியானது 2021 இல் அடைந்த 29% வளர்ச்சியைத் தொடர்ந்து, 2022 இல் கவர்ச்சிமிக்க 26% வளர்ச்சியை அடைந்துள்ளது. வளர்ச்சி விகிதமானது காப்புறுதித் தொழில்துறையின் சராசரி வளர்ச்சியையும் விட கிட்டத்தட்ட மூன்று மடங்காக இருப்பதுடன், இது காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் பெரிய கம்பனிகளுக்கு மத்தியில் மிக உயர்ந்த வளர்ச்சி விகிதம் ஆகும். ஆதாரநிதிக் (Endowment) காப்புறுதி வியாபாரம் 20% னால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் புதிய வியாபாரமானது 30% னால் வளர்ச்சியடைந்துள்ளது. இது சந்தை வளர்ச்சியின் பத்து மடங்குகளாகும். அத்துடன், செயலிழந்த காப்புறுதிகளைப் புதுப்பித்தலானது 16% னால் அதிகரித்து வளர்ச்சியின் தரத்தை உறுதிப்படுத்துகிறது.

மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாத வியாபாரத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி பொதுக் காப்புறுதித் துறையும் 21% விகித வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளதுடன் இது தொழில்துறை சராசரி வளர்ச்சி வீதத்தையும் விட அதிகமாகும். எந்த வித வாகனங்களும் இறக்குமதி செய்யப்படாத ஒரு சூழலில், எங்கள் மோட்டார் GWP 9% மாக வளர்ச்சி அடைந்துள்ள அதே சமயம் மோட்டார் அல்லாத வியாபாரம் 46% மாக வளர்ச்சியடைந்துள்ளது. இது தொழில்துறை வளர்ச்சியை இரண்டு மடங்கையும் விட அதிகமாகும். 2022 ஆம் ஆண்டில் குழுமத்தின் வளர்ச்சியில் பொதுக் காப்புறுதித் துறை 43% பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

இந்திய வர்த்தக சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 3வது ICC Emerging ஆசியா இன்சூரன்ஸ் விருதுகளில் HNBA ஆனது சிறப்பு அங்கீகார விருதாக ஆண்டின் சிறந்த ஆயுள் காப்புறுதிக் கம்பனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அதே விருது வழங்கும் வைபவத்தில் HNBGI ஆனது 'ஆண்டின் சிறந்த பொதுக் காப்புறுதிக் கம்பனியாக சிறப்பு அங்கீகார விருதினை வென்றெடுத்துள்ளது என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும்.

### எங்கள் பாதையை வரையறுத்தல்

ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிகளுக்கான நடுத்தர (medium) இலக்குகளைத் தெளிவாக வரையறுத்தமையே 2022 இல் நாம் அடைந்த செயல்திறனுக்கு முக்கிய காரணியாகும். HNBA ஆனது Tier 2 தரக் கம்பனிகள் மத்தியில் தற்போது முன்னணி வகிக்கும் நிலையில் இருந்து 2026 ஆம் ஆண்டளவில் சந்தைப் பங்கினை 10% ஆக அதிகரிப்பதன் மூலம் Tier 1 தரக் கம்பனியாக ஆவதற்கான தனது அபிலாஷையை வரையறுத்துள்ளது. பல காப்புறுதிக் கம்பனிகள் நிறைந்துள்ள சந்தைப் பிரிவில் இன்னும் 5 ஆண்டுகளில் 5 வது இடத்திற்கு முன்னேற வேண்டும் என பொதுக் காப்புறுதி தனது இலக்கை நிர்ணயித்துள்ளது. எங்களின் திட்டங்கள் விரிவாக, நாம் எவ்வாறு வளருவோம் என்பதை தெளிவாகக் குறிப்பிடுவதுடன், வளர்ச்சியைத் தக்கவைக்கத் தேவையான ஆதரவுக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

### ஆயுள் காப்புறுதி

ஏஜென்சி மற்றும் பங்காளித் துறைகளுக்கு இலட்சிய இலக்குகளை வகுப்பதன் மூலம் முகவராண்மையை வளர்ச்சியடையச் செய்வதே ஆயுள் காப்பீட்டு மூலோபாயத்தின் அடித்தளமாக இருக்கின்றது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 2,762 ஆக இருந்த முகவர்களின் எண்ணிக்கையை 2022 இல் அதிகரிக்கத் தொடங்கினோம், அதே நேரத்தில் திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் அவர்களின் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கிறோம். எங்கள் முகவர்கள் வலையமைப்பை 3,648 ஆலோசகர்களாக அதிகரிக்க முடிந்ததால் இது மிகவும் வெற்றிகரமாக இருந்தது. அடுத்த நிலைக்கு முன்னேறத் தேவையான திறன்கள் மற்றும் தகுதிகளின் அடையாளம் காணப்பட்ட நிலைகள் மூலம் அவர்களின் திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட முகவர் மேம்பாட்டு பாடத்திட்டத்தின் மூலம் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டது. 64 கிளைகளின் வலையமைப்பால் அவர்களுக்கு ஆதரவளிக்கப்பட்டதுடன் தற்போதுள்ள இயற்பியல் உள்கட்டமைப்பிற்குள் 30 புதிய கிளைகளையும் சேர்த்துள்ளோம். விரிவாக்கப்பட்ட ஆலோசகர் வலையமைப்பை பயனுள்ள விதத்தில்

கண்காணிக்க இது நன்கு செயல்படுகிறது. நாங்கள் மாதிரிக் கிளைகள் என்ற எண்ணக்கருவையும் அறிமுகப்படுத்தி, அந்த கருத்திற்கு ஏற்ப 3 புதிய கிளைகளைத் திறந்தோம்.

பங்குடைமைப் பிரிவுகளின் விரிவாக்கமானது வெற்றியின் ஒரு முக்கிய பகுதியாகும். சந்தைப் பங்கு வளர்ச்சியை அதிகரிப்பதற்காக வங்கிகள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் தரகுக் கம்பனிகளுடனான எமது கூட்டாண்மைகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்தியுள்ளோம். HNBA குழுமத்தின் தாய்க் கம்பனியுடனான கூட்டாண்மையானது குறிப்பிட்ட வியாபாரப் பிரிவுகளில் மூலோபாய விரிவாக்கம், வங்கிக் காப்புறுதி அதிகாரிகளுக்கான (Bancassurance Officers) புதிய தொழில்சார் பாதையை அடையாளம் காண்பது மற்றும் தேவையான திறன்கள் மற்றும் திறமைகளைப் பெறுவதற்கு ஆதரவாக ஒரு வங்கிக் காப்புறுதி விற்பனைப் பயிற்சி நிறுவனத்தை (Bancassurance Sales Academy) ஸ்தாபித்தல் ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது.

புதிய பிரேரணைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கம்பனிக்குள்ளேயே (in-house) உருவாக்கப்பட்ட ஒரு முறையான e-Buddy மூலம் புதிய வியாபாரங்களில் 98% பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால், விற்பனையாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் தொழில்நுட்ப மாற்றமானது முக்கிய பங்கை வகித்துள்ளது. நாங்கள் காகிதமில்லாத அலுவலகத்தை உருவாக்கும் பாதையில் சென்று கொண்டிருப்பதால் குறிப்பிடத்தக்களவு செலவையும் கட்டுப்படுத்த முடிந்தது. பல உள்ளக செயல்முறைகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. இது உற்பத்தித்திறனை மேலும் மேம்படுத்தியுள்ள அதே நேரத்தில் தொழில்நுட்ப ஆர்வமுள்ள பணியாளர்களையும் உருவாக்கியுள்ளது. இதன் ஊடாக குழுமத்தை வளர்ச்சியின் மற்றும் செயல்திறனின் புதிய சகாப்தத்தை நோக்கிக் கொண்டு செல்ல முடியும். நாங்கள் ஒரு முக்கிய செயன்முறையிலும் (core system) முதலீடு செய்கிறோம். புதிய மற்றும் புதுமையான காப்புறுதித் திட்டங்களை முன்வைக்கவும், தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் இது உதவும்.

ஒப்புவமையில்லாத வாடிக்கையாளர் சேவையானது விற்பனைக் குழாமின் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்ப மாற்றம் ஆகியவற்றின் இரண்டு முக்கிய உத்திகளை முன்வைக்கிறது. சமூக ஊடக வலையமைப்பையும் தழுவி, விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள 4 இலக்கம் கொண்ட துரித இலக்க தொலைபேசி அழைப்பு வசதியைக் கொண்ட வாடிக்கையாளர் அழைப்பு மையத்தையும் தாண்டி எமது வாடிக்கையாளர்களின் பிரச்சினைகளுக்கு செவிசாய்க்கும் எங்களின் செயன்முறைகளை நாங்கள் மேலும் விரிவுபடுத்தியுள்ளோம். அனைத்து வாடிக்கையாளர் தொடர்பு மையங்களிலும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் செவிசாய்க்கப்படுகின்ற அதே நேரத்தில் வேறுபட்ட தொடர்பு மையங்களும் உருவாக்கப்படுகின்றன. முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காக தொடர் கண்காணிப்புடன் ஆண்டு முழுவதும் வாடிக்கையாளர் அனுபவமானது ஒரு திருப்திகரமான மட்டத்தில் பராமரிக்கப்படுகின்றது. HNBA 194 MDRT வெற்றியாளர்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இது கம்பனியின் வரலாற்றில் மிகக் கூடிய எண்ணிக்கையாகும். இது செயல்படுத்தப்பட்ட பயிற்சி முறைமறகளின் வெற்றியையே பிரதிபலிக்கின்றது. சர்வதேச வங்கி மற்றும் நிதி விருதுகள் (Global Banking and Finance Awards) 2022 இல் முன்னணி வங்கிக் காப்புறுதித் துறையாக (Bancassurance Channel) அங்கீகரிக்கப்பட்டமையும் சிறப்பான ஒன்றாகும்.

## பொதுக் காப்புறுதி

பொதுக் காப்புறுதித் துறையில் 7வது பெரிய கம்பனியாக விளங்கும் எமது தற்போதைய நிலையில் இருந்து இன்னும் 5 ஆண்டுகளில் 5 வது இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற எமது இலக்குடன் சீராக நகர்ந்து செல்லும் பொதுக் காப்புறுதித் துறையின் வளர்ச்சியானது காப்புறுதித் தொழில்துறையை விட 21% வளர்ச்சியை அடைந்துள்ளமை பாராட்டத்தக்கது. அதன்படி, சந்தைக் களத்தை மறுபரிசீலனை செய்யவும், பெறுமாணங்களை மறுவடிவமைக்கவும் மற்றும் எங்கள் இலக்குகளை அடைவதற்கான போக்குகளுக்கு பதிலளிக்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். காப்புறுதித் துறையில் உள்ள முன்னணிக் கம்பனிகளுடன் திறம்பட போட்டியிடக்கூடிய தயாரிப்புகளை உருவாக்குவதற்கும், அடையாளம் காணப்பட்ட பிரிவுகளில் ஒரு முக்கிய கம்பனியாக மாற்றுவதற்கும் நாங்கள் எங்கள் பலத்தைப் பயன்படுத்தினோம்.

வாடிக்கையாளர் தேவைகள் தொற்று நோய்க் காலத்தின் போது மாறியதால், இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வாடிக்கையாளர் திருப்தி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தியதன் மூலம் எங்கள் தயாரிப்புகளை நாம் மாற்றினோம். காப்புறுதியின் சட்டப்பூர்வ தேவைக்கு இணங்க வேண்டியுள்ளதால் பலர் மூன்றாம் தரப்பு

மோட்டார் வாகனக் காப்பீட்டை நாடுகின்றமை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்த ஒரு முக்கிய சவாலாக இருந்ததுடன், மூன்றாம் தரப்புக் காப்புறுதியை விரிவான காப்பீடாக (comprehensive) மேம்படுத்துவதன் மூலம் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான தெளிவான வாய்ப்பு எமக்கு இருந்தது. எரிபொருள் நெருக்கடியால் முகவர்களுக்கு இடையூறு ஏற்பட்டதால், தொடர்புகள் ஊடாக வாடிக்கையாளர்களைச் சந்திப்பது சவால்கள் நிறைந்ததாக இருந்தது. இதன் விளைவாக, பல முகவர்கள் தாம் கடின உழைப்பாளிகள் குழுவாக இருக்கிறோம் என்பதை உறுதி செய்து பிரதிபலிக்கும் வகையில் வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் புதிய இடமாக எரிபொருள் வரிசைகளைப் பயன்படுத்தினார்கள்.

## செயல்திறன்

மொத்த கட்டுப்பண வருமானமானது ரூ.15.6 பில்லியனாக அதிகரித்தமையால் HNBA குழுமத்தின் உயர்மட்ட வளர்ச்சியானது 24% ஆக இருந்தது. இது குழுமத்தின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட அதிகபட்ச வளர்ச்சியாகும். விற்பனைக் குழாமின் எண்ணிக்கையில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்பு மற்றும் அவர்களின் உற்பத்தித்திறனின் முன்னேற்றம் ஆகியவை வாடிக்கையாளர்களின் அடையாளம் காணப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விரிவான தயாரிப்புகளை வடிவமைக்க ஏதுவாயமைந்தது. நிகர ஈட்டப்பட்ட கட்டுப்பணம் 22% அதிகரித்து ரூ.13.1 பில்லியனாக வளர்ச்சியடைந்தமையானது குழுமத்தின் இடர் பிரிவை (risk profile) நிர்வகிப்பதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் அதிகரித்த கவனம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. இதர வருவாய்கள் ரூ.5.2 பில்லியனாக இருந்ததுடன் இது 77% அதிகரிப்பாகும். வட்டி விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் சிறந்த முதலீட்டு உத்தி ஆகியவையே இதற்கான காரணமாகும்.

மொத்த அனுகூலங்கள், உரிமைகோரல்கள் மற்றும் செலவுகள் ரூ.15.9 பில்லியனாக உள்ளதுடன் இது 33% அதிகரிப்பாகும். உரிமைக் கோரிக்கைகளின் அதிக செலவு, அதிலும் குறிப்பாக மோட்டார் வாகனம் மற்றும் மருத்துவ பிரிவுகளின் செலவு மற்றும், குறிப்பாக செலுத்தி முடிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களாக இருந்த (paid-up policies) ஆயுள் காப்புறுதிப் பத்திரங்கள் அதிகளவில் இரத்துச் செய்யப்பட்டமை (surrender) ஆகியன பணவீக்கத்தின் தாக்கத்தை பிரதிபலிக்கிறது. மற்றைய இயக்க மற்றும் நிர்வாகக் கட்டணங்கள் 38% மாக அதிகரித்துள்ளது. செலவுகளை மேலும் சீராக்க குழும அளவிலான பல முயற்சிகள் இருந்தபோதிலும் ஊழியர்களின் சம்பளத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் பணவீக்கத்தின் தாக்கத்தையே இது பிரதிபலிக்கிறது.

வரிக்கு முந்தைய இலாபம் ரூ. 2.4 பில்லியன்களாக இருப்பதுடன் இது 36% அதிகரிப்பாகும். இது உயர்நிலை (top line) மற்றும் முதலீட்டு வருமானம் மற்றும் செலவுகளை நிர்வகித்தல் ஆகியவற்றில் செலுத்தப்பட்ட கூர்மையான கவனத்தை பிரதிபலிக்கிறது. வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 1.8 பில்லியன்களாக இருப்பதுடன் இது 50% அதிகரிப்பாகும். இதுவே குழுமத்தின் வரலாற்றில் சிறந்த ஆண்டுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டு கம்பனிகளின் மதிப்பீடுகளும், இறையாண்மை மதிப்பீட்டின் (sovereign rating) தரமிறக்கத்தின் காரணமாக எதிர்மறை மதிப்பீட்டைக் கொண்ட கண்காணிப்புடன் A-(lka) வரை தரம்குறைந்தன. காப்புறுதிக் கம்பனிகளின் நிதி வலிமையை மதிப்பிடுகின்ற மதிப்பீடுகளைப் பெற்றுள்ள ஒரு சில காப்புறுதிக் கம்பனிகளில் HNBA மற்றும் HNBGI ஆகியவை இரு கம்பனிகளாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆயுள் காப்புறுதி

மேலே குறிப்பிட்டுள்ளபடி, வலுவான GWP வளர்ச்சியுடன் ஆயுள் காப்புறுதிக்கு இது ஒரு நட்சத்திர ஆண்டாக இருந்தது. முதலீட்டு வருவாயால் உந்தப்பட்டதன் பெறுபேறாக நிகர வருமானமானது ரூ.12.5 பில்லியனாக 36% னால் வளர்ச்சி அடைந்தது. மேலும், கம்பனியானது முந்தைய ஆண்டை விடவும் வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.1.99 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன் இது 37% வளர்ச்சியாகும். வருடத்தில் வணிக நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்த சமூக-பொருளாதார உறுதியற்ற தன்மையின் பார்வையில் இது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

வருடத்தில் மொத்த சொத்துக்கள் 14% அதிகரித்து ரூ.33.7 பில்லியனாக இருந்தது. நிதி முதலீடுகள் 21% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ.29.8 பில்லியனாக இருப்பதுடன் இது மொத்த சொத்துக்களில் 89% ஆகவும்

உள்ளன. வியாபாரத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் 21% அதிகரித்து ரூ.24.6 பில்லியனாக இருந்தது.

## பொதுக் காப்புறுதி

இந்த ஆண்டில் கவனம் செலுத்தப்பட்ட மூலோபாயங்கள் திறம்படச் செயற்பட்டதன் காரணமாக 21% வளர்ச்சியுடன் பொதுக் காப்புறுதித் துறையும் வலுவான முன்னேற்றத்தை அடைந்து ரூ.6.8 பில்லியன் GWP யைப் பதிவு செய்தது. எவ்வாறாயினும், வாகனம் திருத்தும் செலவுகள் அதிகரித்ததன் விளைவாக உரிமைகோரல்கள் 32% மாக அதிகரித்தன. அத்துடன், மக்கள் வழமைபோல் வேலைக்குத் திரும்ப ஆரம்பித்ததும் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பியதால் மோட்டார் விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இதனால், நிகர அனுகூலங்கள், உரிமைக்கோரல்கள் மற்றும் செலவுகள் 28% அதிகரித்து ரூ.5.5 பில்லியனாக உள்ளது. வரிக்கு முந்தைய இலாபம் 37% னால் அதிகரித்து ரூ. 0.5 பில்லியனாக இருந்த அதே சமயம், வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 450 மில்லியனாக இருந்ததுடன் இது சவாலான ஆண்டில் 33% வளர்ச்சியாகும். வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் நிதி முதலீடுகளானது 8% மாக ரூ. 4.8 பில்லியனாக அதிகரித்தமையினால் மொத்த சொத்துக்கள் 13% அதிகரித்து ரூ. 8.5 பில்லியனாக இருந்தது.

## அணியைக் கட்டியெழுப்புதல்

குறிப்பாக அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் சவால்களை விடுத்துள்ள ஒரு ஆண்டில்எங்கள் மக்கள் மீது கவனம் செலுத்துவது ஒரு முக்கியமான மூலோபாய முன்னுரிமையாக இருந்தது. அதிகரித்து வரும் பணவீக்கத்திலிருந்து மீள்வதற்காக, கொடுப்பனவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன. பிரதான நிறைவேற்று அதிகாரி டவுன்ஹால்ஸ் இரு வழி தகவல்தொடர்புகளை எளிதாக்கும் அதே வேளையில் குழுவை ஊக்குவிக்கவும் கவர்ந்திழுக்கவும் தலைவரின் விருதுகள் அளவு மேம்படுத்தப்பட்டன. இரு நிறுவனங்களின் ஊழியர்களையும் ஈடுபடுத்தும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேலை செய்யத் தகுந்த சிறந்த இடம் (Great Place to Work) எனும் அமைப்பினால் ஆசியாவின் வேலை செய்யத் தகுந்த 70 சிறந்த இடங்கள் பட்டியலில் இடம் பிடித்த இலங்கையின் ஒரே காப்புறுதிக் கம்பனி என்ற மரியாதையையும் HNB அஷ்யுரன்ஸ் பெற்றுக் கொண்டுள்ளது. நாட்டிலும் பணிபுரிவதற்குச் சிறந்த முதல் 40 கம்பனிகளிலும் இது இடம் பெற்றுள்ளது.

நாங்கள் எங்கள் அணிகளில் பாலின சமநிலையை ஏற்படுத்தியுள்ளோம். பெண்களுக்கு வேலை செய்வதற்கான சிறந்த பணியிடங்களில் ஒன்றாக இருப்போம் என்ற எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றி வருகிறோம். எங்கள் அணிகளில் சேருவதற்கு நாங்கள் ஏற்கனவே பல பெண்களை ஈர்த்துள்ளோம். பெண்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் தொழில் முன்னேற்றத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் நெகிழ்வான வேலை நேரம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுடன் நாம் இப்போது உடைந்து போன தொடர்புகளைச் சரிசெய்து வருகிறோம்.

அழுத்தம் மிக்க மேக்ரோ-பொருளாதார நிலைமைகள் காரணமாக ஊழியர்களின் இடம்பெயர்வு அதிகரித்த போதிலும், ஒவ்வொருவரும் தங்களின் திறனை உணர்ந்துகொள்வதற்காகவும் அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஆதரிப்பதற்காகவும் பயிற்சியானது மற்றொரு முக்கிய அம்சமாக இருந்தது. நாங்கள் உயர்ந்த அபிலாஷைகளை நோக்கிச் செல்லும் எமது பயணத்தில் பயிற்சியின் பரப்பை அதிகரிக்கச் செய்லதற்காக வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களையும் சேர்த்துள்ளோம். ஒரு புணிதமான ஊழியர் மதிப்பு முன்மொழிவை செயல்படுத்துவதன் மூலம் அதிக உந்துதல் கொண்ட குழுவை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

## இடர் முகாமைத்துவம்

இந்த ஆண்டில் அபாயவாய்ப்புக்களை நிர்வகிப்பது மிகவும் முக்கியமானதாக இருந்ததுடன் பணிப்பாளர்கள் சபை மற்றும் அதன் துணைக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட வழிகாட்டுதல்கள் விலைமதிப்பற்றதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் தங்கள் விழிப்புணர்வை அதிகரித்திருந்தனர். முதலீட்டுக் குழு மற்றும் இடர் குழுவின் வழிகாட்டுதல், வெளிநாட்டு நாணயம் குறிப்பிடப்பட்ட அரசாங்கப் பத்திரங்களுக்கு வெளிப்படுவதைத் தவிர்க்க எங்களுக்கு உதவியது. எவ்வாறாயினும், அரசாங்கப் பிணைப் பத்திரங்களில் எமது முதலீடுகளில் ஒரு பகுதியை நாம் முதலீடு செய்தாக வேண்டும் என்ற ஒழுங்குமுறை நியதியின் படி

நாங்கள் கோரப்பட்டுள்ளதால், உள்நாட்டுக் கடனுக்கான குறிப்பிடத்தக்க அபாயவாய்ப்பும் எமக்கு உள்ளது. பணவீக்கம் மற்றும் அதிகரித்த வரிவிதிப்பு ஆகியவை குடும்ப வரவுசெலவுத் திட்டங்களைக் சுருக்கி, காப்புறுதித் தயாரிப்புகளுக்கான தேவையைக் குறைக்கும். தொழிலில்துறையிலும் கூட்டம் அதிகமாக உள்ளது. மேலும் சிறிய கம்பனிகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது HNBA மற்றும் பிற பெரிய நிறுவனங்களுக்கு கனிம வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்கும். பொருளாதார இடம்பெயர்வு காரணமாக முக்கிய திறமைசாலிகளை இழப்பது ஒரு முக்கிய கவலையாக உள்ளது. இது பொதுக் காப்புறுதிக்கான மறுகாப்புறுதிக் கம்பனிகளில் மாற்றங்களை அவசியமாக்கி உள்ளது.

HNBA குழுமமானது HNBA க்கு 306% மற்றும் HNBGI க்கு 239% என்ற வகையில் CAR உடன் மூலதன மற்றும் பணப்புழக்க காப்பரண்களை உருவாக்கியுள்ளது.

## ESG க்கான அர்ப்பணிப்பு

எங்கள் ESG பயணத்தைத் தொடர நாங்கள் உறுதிபூண்டுள்ளதுடன், எங்கள் குறைபாடுகள் மற்றும் முக்கியமாக, எங்களது மதிப்பு உருவாக்கும் செயல்முறைகள் மூலம் நிலையான வளர்ச்சியில் ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் எவை என்பதைப் புரிந்துகொள்வதற்காக ஒரு இடைவெளி பகுப்பாய்வை (gap analysis) மேற்கொள்கிறோம். நுண் காப்புறுதி (Micro Insurance) போன்ற கபாப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் ஏற்கனவே சில முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். நிதி நிறுவனங்களுடனான நுண் நிதி நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு இதன் மூலம் ஆதரவு கிடைத்துள்ளது. மேலும், காப்புறுதி என்பது எங்கள் வாடிக்கையாளர்களின் நிதி ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கும் எதிர்பாராத சவால்களை சமாளிக்கவும் அவர்களுக்கு உதவும் ஒரு பொறிமுறையாகும். எங்களின் ஆலோசகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மட்டுமின்றி சமூகக் குழுக்களுக்கும் பொருளாதார நெருக்கடியின் போது அவர்களின் நிதி ஸ்திரத்தன்மையை எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்த வழிகாட்டுதல் அமர்வுகளை நாங்கள் மேற்கொண்டோம் என்பதுடன் இது காலத்தின் தேவை என்று நாங்கள் நம்புகிறோம். எவ்வாறாயினும், ஸ்திரத்தன்மை என்பது ஒரு பயணமே தவிர ஓர் இலக்கு அல்ல என்பதுடன் நாங்கள் முன்னேறும்போது மேலும் புதுமைகளைக் கொண்டு வர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். பசுமையான காலடித் தடங்கள் குறித்து நாங்கள் பரிந்துரை செய்கிறோம் என்பதுடன், பல தகவல் தொழில்நுட்ப (IT) முயற்சிகள், go-green திட்டம், காகிதம் இல்லாத அலுவலகத்தை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் காகித பயன்பாட்டைக் குறைக்க முயற்சிகளை எடுத்துள்ளோம்.

## எதிரே உள்ள பாதை

மெக்ரோ-பொருளாதார நிலைமைகள் அதிக அளவு மன அழுத்தத்துடன் நெருக்கடி மிக்கதாகவே இருந்து வருவதுடன், செயல்பாட்டு நிலவரத்தை உறுதிப்படுத்த நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம் என நாங்கள் நம்புகிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிதி வசதி கிடைத்தல் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவை கண்காணிக்கப்பட வேண்டிய முக்கிய முன்னேற்றங்களாக இருப்பதுடன், அது நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையில் முக்கிய பங்கு வகிக்கும். 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் வளர்ச்சி 4.2% மாக சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் கொள்கை அமுலாக்க நடவடிக்கைகள் நடைமுறைக்கு வரும் போது அது அதிகரிக்கும்.

HNBA குழுமமானது ஆரோக்கியமான நீண்ட கால வியாபாரத்தை இலக்காகக் கொண்டுள்ளதால் ஒவ்வொரு நெருக்கடியிலும் வரும் வாய்ப்புகளைத் தேடி எச்சரிக்கையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றது. விரிவாக்கம் மற்றும் காப்புறுதித் திட்டங்களை வடிவமைக்கும் உத்திகளை மேம்படுத்துவதன் ஊடாக GWP ஐ மேலும் அதிகரிப்பதன் மூலம் சந்தைப் பங்கைக் கூட்டுவதற்கான ஒரு போக்கை நாங்கள் கடைப்பிடித்து வருகின்றோம். எங்கள் முக்கிய பலம் நம்பிக்கையும் ஸ்திரத்தன்மையுமாகும் என்பதுடன், எங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான எங்கள் லட்சிய திட்டங்களுடன் நாங்கள் முன்னேறி வருவதனால் இந்தக் குணாதியங்கள் இந்த ஆண்டு முழுவதும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுவதை நாங்கள் தொடர்ந்து உறுதி செய்வோம்.

**பாராட்டுக்கள்**

இந்த ஆண்டில் முன்வைக்கப்பட்ட சமாளிக்க முடியாத சவால்களை சமாளிப்பதற்கான வழிகளைக் கண்டறிந்த உறுதியான மற்றும் சுறுசுறுப்பான குழுவை வழிநடத்தியதற்காக நான் பெருமைப்படுகிறேன். வதுடன் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை பெற்றுக் கொடுப்பதில் அவர்கள் ஆற்றிய பங்கினையிட்டு அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். அர்ப்பணிப்பும் அனுபவமும் கொண்டபணிப்பாளர் சபையிடமிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற வழிகாட்டல் மற்றும் தலைவரிடமிருந்து கிடைத்த ஊக்குவிப்பு ஆகியன தொடர்பில் எனது பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். குழுமத்தின் குறிப்பிடத்தக்க இந்தப் பெறுபேறுகளுக்காக பங்களிப்பை வழங்கிய பாராட்டத்தக்க செயற்பாட்டிற்காக திரு. சித்துமின ஜயசுந்தர தலைமையிலான HNB ஜெனரல் இன்சூரன்ஸ் அணிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் ஆண்டு முழுவதும் வழங்கப்பட்ட விலைமதிப்பற்ற ஆதரவிற்காக எங்கள் தாய்க் நிறுவனமான ஹட்டன் நெஷனல் வங்கி (HNB) மற்றும் HNB குழும நிறுவனங்களின் விநியோக வலையமைப்புகளின் நிர்வாகத்திற்கும் உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்காவிட்டால் நான் எனது கடமையை தவறவிட்டு விடுபவனாக ஆகிவிடுவேன். காப்புறுதி வியாபாரத்தை ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனமான இலங்கையின் காப்புறுதித் தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் இந்த வருடம் முழுவதும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். காப்புறுதி ஆலோசகர்கள், எங்கள் தாய் நிறுவனமான ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள், தரகர்கள், வங்கிக் காப்புறுதி அதிகாரிகள், பிற விபாரக் கூட்டாளர்கள் மற்றும் மறுகாப்புறுதியாளர்கள் உட்பட எங்கள் வியாபாரப் பங்காளிகளிடமிருந்தே காப்புறுதி வியாபாம் அதன் பலத்தை பெற்றுக் கொள்கின்கிறது. எங்களுடைய பயணத்தில் எங்களுடன் கூட்டுச் சேர்ந்து தொடர்ந்தும் எம்மீது நம்பிக்கை வைத்தமைக்காக இந்தப் பங்குதாரர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறுவதுடன், நாங்கள் தொடர்ந்தும் முன்னேறும்போது அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றேன்,

**லசித விமலரத்ன**
**பிரதான நிறைவேற்று அதிகாரி**
**HNB அஷ்யூரன்ஸ் பிஎல்சி**

**கொழும்பு, இலங்கை**
**17 பெப்ரவரி 2023**

நிதி நிலை பற்றியஅறிக்கை

| டிசம்பர் 31 ஆந் திகதிய நிலவரப்படி | குறிப்பு | குழுமம் 2022 ரூ.'000 | குழுமம் 2021 ரூ.'000 | கம்பனி 2022 ரூ.'000 | கம்பனி 2021 ரூ.'000 |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 418,258 | 282,884 | 260,442 | 141,390 |
| சொத்துகளைப் பயன்படுத்துவதற்கான உரிமை | 9 | 376,579 | 395,148 | 343,824 | 362,336 |
| அருவச் சொத்துக்கள் | 10 | 61,118 | 63,180 | 57,054 | 57,839 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் | 46 | 99,430 | 291,832 | - | 273,543 |
| நிதி முதலீடுகள் | 11 | 34,624,131 | 29,094,085 | 29,844,875 | 24,667,102 |
| துணை நிறுவனத்தில் முதலீடு | 12 | - | - | 1,150,000 | 1,150,000 |
| ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கான கடன்கள் | 13 | 420,914 | 403,452 | 420,914 | 403,452 |
| மறுகாப்புறுதிக் கம்பனியிலிருந்து பெறத்தக்கவை | 14 | 1,044,318 | 1,072,206 | 184,249 | 317,009 |
| கட்டுப்பண வரவுகள் | 15 | 1,853,670 | 1,247,997 | 18,547 | 7,822 |
| ஏனைய சொத்துக்கள் | 16 | 999,838 | 747,946 | 713,293 | 507,528 |
| காப்புறுதி கோட்பாட்டு - பிற்போடப்பட்ட செலவுகள் | 17 | 163,995 | 157,710 | - | - |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை | 18 | 1,033,305 | 2,112,745 | 725,420 | 1,575,931 |
| **மொத்த சொத்துக்கள்** | | **41,095,556** | **35,869,185** | **33,718,618** | **29,463,952** |
| | | | | | |
| **பங்குகள் மற்றும் பொறுப்புகள்** | | | | | |
| **பங்கு வைத்திருப்பவர்களது பங்குகள்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 19 | 1,171,875 | 1,171,875 | 1,171,875 | 1,171,875 |
| வருமான ஒதுக்கீடுகள் | 20 | 7,822,715 | 6,644,680 | 6,552,433 | 5,548,813 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | 21 | (322,296) | 4,009 | (138,616) | 4,446 |
| ஏனைய இருப்புக்கள் | 22 | 22,358 | (11,421) | 3,972 | (6,614) |
| ஆயுள் காப்புறுதிதாரர்களின் விற்பனை இருப்பு நிதி | 23 | (1,277,414) | (67,291) | (1,277,414) | (67,291) |
| கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை இருப்பு | 24 | 381,156 | 381,156 | 381,156 | 381,156 |
| நிறுவன பங்குதாரர்களுக்கு உரித்தாகக்கூடிய மூலதனமும் ஒதுக்கங்களும் | | 7,798,394 | 8,123,008 | 6,693,406 | 7,032,385 |
| கட்டுப்படுத்தப்படாத வட்டி | | | | | |
| **மொத்த பங்குகள்** | | **7,798,394** | **8,123,008** | **6,693,406** | **7,032,385** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் - ஆயுள் காப்புறுதி | 25 | 24,582,641 | 20,342,757 | 24,582,641 | 20,342,757 |
| காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் - பொதுக் காப்புறுதி | 26 | 4,181,58 | 8 3,735,922 | - | - |
| ஊழியர்களின் வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்புக்கள் | 27 | 236,424 | 239,167 | 142,692 | 137,328 |
| தற்போதைய வரி பொறுப்புக்கள் | 28 | 253,810 | 62,168 | 209,338 | 19,871 |
| மறுகாப்புறுதி கடன் வழங்குபவர்கள் | 29 | 959,693 | 1,085,512 | 227,512 | 453,054 |
| குத்தகைக் கடன் வழங்குபவர்கள் | 30 | 410,719 | 421,838 | 376,926 | 390,374 |
| ஏனைய பொறுப்புக்கள் | 31 | 2,406,748 | 1,747,148 | 1,384,408 | 1,034,819 |
| வங்கி மேலதிக பற்று | 18 | 265,539 | 111,665 | 101,695 | 53,364 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **33,297,162** | **27,746,177** | **27,025,212** | **22,431,567** |
| **மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **41,095,556** | **35,869,185** | **33,718,618** | **29,463,952** |

இந்த நிதிநிலை அறிக்கைகளானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்கியதாகும்.

**புன்சிரினி பெரேரா**
பிரதான நிதி உத்தியோகத்தர்

இந்த நிதி அறிக்கைகளுக்கு பணிப்பாளர்கள் சபையே பொறுப்பாகும்.
கையொப்பமிடப்பட்டது மற்றும் பணிப்பாளர் சபையின் சார்பாக;

**ரோஸ் குரே**
**தலைவர்**

**அசோக குணசேகர**
**பணிப்பாளர்**

கொழும்பு, இலங்கை
17 பெப்ரவரி 2023

# இலாபம் அல்லது இழப்பு மற்றும் ஏனைய விரிவான வருமான அறிக்கை

| டிசம்பர் 31 ஆந் திகதிய நிலவரப்படி | குறிப்பு | குழுமம் 2022 ரூ.'000 | குழுமம் ரூ.'000 | கம்பனி 2022 ரூ.'000 | கம்பனி ரூ.'000 | வேற்றுமை குழுமம் % | வேற்றுமை கம்பனி % |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த கட்டுப்பண வருமானம் | 32 | 15,637,736 | 12,646,947 | 8,911,460 | **7,091,470** | 24 | 26 |
| மறுகாப்பீட்டாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டுப்பணம் | 33 | (2,164,702) | (1,648,861) | (473,012) | (355,537) | 31 | 33 |
| **நிகர கட்டுப்பண வருமானம்** | | 13,473,034 | 10,998,086 | 8,438,448 | 6,735,933 | 23 | 25 |
| ஈட்டப்படாத கட்டுப்பணத்துக்கான கையிருப்பில் நிகர மாற்றம் | 34 | (385,557) | (242,252) | | | 59 | - |
| **நிகர ஈட்டப்பட்ட கட்டுப்பணம்** | 35 | 13,087,477 | 10,755,834 | 8,438,448 | 6,735,933 | 22 | 25 |
| | | | | | | | |
| **ஏனைய வருமானங்கள்** | | | | | | | |
| வட்டி மற்றும் இலாபத்தொகை வருமானம் | 36 | 4,541,682 | 2,555,274 | 3,972,636 | 2,311,120 | 78 | 72 |
| நிகர பணமாக்கப்பட்ட ஆதாயங்கள் | 37 | 390,099 | 52,921 | 105,376 | 50,109 | 637 | 110 |
| நிகர நியாயமான மதிப்பு (இழப்புகள்)/ஆதாயங்கள் | 38 | (66,383) | 79,128 | (68,663) | 49,484 | (184) | (239) |
| கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் | 39 | 272,223 | 225,738 | 54,394 | 77,025 | 21 | (29) |
| வேறு வருமானம் | 40 | 36,442 | 5,551 | 33,223 | 2,766 | 556 | 1101 |
| **மொத்த மற்ற வருவாய்** | | 5,174,063 | 2,918,612 | 4,096,966 | 2,490,504 | 77 | 65 |
| **நிகர வருமானம்** | | 18,261,540 | 13,674,446 | 12,535,414 | 9,226,437 | 34 | 36 |
| | | | | | | | |
| **நிகர நன்மைகள், உரிமைகோரல்கள் மற்றும் செலவுகள்** | | | | | | | |
| நிகர காப்பீட்டு பலன்கள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | 41 | (5,551,509) | (4,095,720) | (2,224,412) | (1,638,904) | 36 | 36 |
| நிலுவையில் உள்ள காப்பீட்டு உரிமைகோரல்களில் நிகர மாற்றம் | 42 | (27,488) | (127,570) | 54,885 | (7,184) | (78) | (184) |
| ஒப்பந்த பொறுப்புகளில் மாற்றம் - ஆயுள் நிதி | 25 | (4,340,103) | (3,249,356) | (4,340,103) | (3,249,356) | 34 | 34 |
| பிற இயக்க மற்றும் நிர்வாக செலவுகள் | 43 | (4,000,490) | (2,892,824) | (2,483,649) | (1,694,018) | 38 | 47 |
| காப்புறுதிப் பொறுப்பேற்பு மற்றும் நிகர கையகப்படுத்தல் செலவுகள் | 44 | (1,821,540) | (1,456,258) | (1,437,045) | (1,098,207) | 25 | 31 |
| நிதி மற்றும் பிற காப்பீடு தொடர்பான செலவுகள் | | (134,488) | (104,340) | (111,424) | (86,557) | 29 | 29 |
| **மொத்த நன்மைகள், உரிமைகோரல்கள் மற்றும் பிற செலவுகள்** | | (15,875,618) | (11,926,068 ) | (10,541,748 ) | (7,774,226) | 33 | 36 |
| வரி விதிப்புக்கு முந்திய இலாபம் | | 2,385,922 | 1,748,378 | 1,993,666 | 1,452,211 | 36 | 37 |
| வருமான வரி செலவு | 46 | (555,398) | (524,730) | (510,046) | (451,712) | 6 | 13 |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 1,830,524 | 1,223,648 | 1,483,620 | 1,000,499 | 50 | 48 |
| | | | | | | | |
| **ஏனைய விரிவான வருமானம், தொடர்புடைய வரி நிகர,** | | | | | | | |
| **இலாபம் அல்லது நஷ்டம் என்று அல்லது மறுவகைப்படுத்தப்படும் பொருட்கள்** | | | | | | | |
| - விற்பனைக்கு கிடைக்கும் நியாயமான மதிப்பில் நிகர மாற்றம் நிதி சொத்துக்கள் | | (1,647,992) | (914,208) | (1,386,07 8) | (826,914) | 80 | 68 |
| - பணமாக்கப்பட்ட ஆதாயங்கள் வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்டது | 37 | - | (9,490) | - | (9,490) | 100 | 100 |
| - மறுவகைப்படுத்தலில் AFS இருப்புத் தொகையை மாற்றியமைத்தல் | 31 | 32,893 | | 32,893 | | 100 | 100 |
| - விற்பனைக்கு கிடைக்கும் நியாயமான மதிப்பில் நிகர மாற்றம்<br>- நிதிச் சொத்துக்கள் ஆயுள் காப்புறுதாரர்களின் விற்பனை இருப்பு நிதிக்கு மாற்றப்பட்டன | 23 | 1,210,123 | 825,224 | 1,210,123 | 825,224 | 47 | 47 |
| - தொடர்புடைய வரி | 46 | 78,671 | 8,729 | - | - | 801 | - |
| **ஒருபோதும் லாபம் அல்லது நஷ்டம் என்று மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்** | | | | | | | |
| - வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் உண்மையான ஆதாயங்கள் | 27 | 37,945 | 44,140 | 10,586 | 27,302 | (14) | (61) |
| - தொடர்புடைய வரி | 46 | (4,166) | (4,041) | - | - | 3 | - |
| **ஆண்டிற்கான மொத்த பிற விரிவான வருமானம், தொடர்புடைய வரியின் நிகரம்** | | (292,526) | (49,646) | (132,476) | 16,122 | 489 | (922) |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | 1,537,998 | 1,174,002 | 1,351,144 | 1,016,621 | 31 | 33 |
| | | | | | | | |
| **இலாபம் தொடர்புடையவைகள்:** | | | | | | | |
| கம்பனியின் பங்கு வைத்திருப்பவர்கள் | | 1,830,524 | 1,223,648 | 1,483,620 | 1,000,499 | 50 | 48 |
| கட்டுப்படுத்த முடியாத வட்டி | | - | - | - | - | - | - |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 1,830,524 | 1,223,648 | 1,483,620 | 1,000,499 | 50 | 48 |
| | | | | | | | |
| **மொத்த விரிவான வருமானம் தொடர்புடையவைகள்:** | | | | | | | |
| கம்பனியின் பங்கு வைத்திருப்பவர்கள் | | 1,537,998 | 1,174,002 | 1,351,144 | 1,016,621 | 31 | 33 |
| கட்டுப்படுத்த முடியாத வட்டி | | - | - | - | - | - | - |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | 1,537,998 | 1,174,002 | 1,351,144 | 1,016,621 | 31 | 33 |
| | | | | | | | |
| ஒரு பங்குக்கான அடிப்படை மற்றும் நீர்த்த வருவாய் (ரூ.) | 47 | 12.20 | 8.16 | 9.89 | 6.67 | 50 | 48 |
| ஒரு பங்கின் இலாபத் தொகை (ரூ.) | 48 | 3.65 | 3.20 | | | | |

## பங்குகளில் ஏற்படும் மாற்றங்களின் அறிக்கை - குழுமம்

| | குறிப்பு | கூறப்பட்ட மூலதனம் | வருமான ஒதுக்கீடுகள் | விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | ஏனைய ஒதுக்கீடுகள் | ஆயுள் காப்புறுதிதாரர்களின் விற்பனை இருப்பு நிதியம் | வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறை இருப்பு | மொத்த பங்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **01 ஜனவரி 2021 ஆம் திகதியில் இருப்பு (a)** | | 1,171,875 | 5,841,032 | 93,754 | (51,520) | 757,933 | 381,156 | 8,194,230 |
| **ஆண்டிற்கான விரிவான வருமானம்** | | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் (b) | 20 | - | 1,223,648 | - | - | - | - | 1,223,648 |
| **ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம், சம்பந்தப்பட்ட வரிகளின் நிகரம்** | | | | | | | | |
| விற்பனைக்குக் கிடைக்கும் நிதிச் சொத்துகளின் நியாயமான மதிப்பில் நிகர மாற்றம் | 21 | - | - | (914,969) | - | - | - | (914,969) |
| ஆயுள் காப்புறுதிதாரர்களின் விற்பனை ரிசர்வ் நிதிக்கு மாற்றப்படும் விற்பனைக்கான நிதிச் சொத்துகளின் நியாயமான மதிப்பில் நிகர மாற்றம் | 21 | - | - | 825,224 | - | - | - | 825,224 |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களில் உண்மையான ஆதாயங்கள் | 22 | - | - | - | 40,099 | - | - | 40,099 |
| **ஆண்டிற்கான ஏனைய மொத்த விரிவான வருமானம் (c)** | | - | - | (89,745) | 40,099 | - | - | (49,646) |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் (d=b+c)** | | - | 1,223,648 | (89,745) | 40,099 | - | - | 1,174,002 |
| விற்பனைக்குக் விடப்பட்டுள்ள நிதிச் சொத்துகளின் நியாயமான மதிப்பில் நிகர மாற்றம், விற்பனைக்குக் கிடைக்கும் கையிருப்பிலிருந்து மாற்றப்பட்டது (e) | 23 | - | - | - | - | (825,224) | - | (825,224) |
| **உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் நேரடியாக பங்கில் பதிவு செய்யப்பட்டுள்ளன தாய்க் கம்பனியின் உரிமையாளர்களுக்கு விநியோகம்** | | | | | | | | |
| இறுதி இராபத் தொகை 2020 (f) | 48.4 | - | (420,000) | - | - | - | - | (420,000) |
| **31 டிசம்பர் 2021 ஆம் திகதியில் இருப்பு (a+d+e+f)** | | 1,171,875 | 6,644,680 | 4,009 | (11,421) | (67,291) | 381,156 | 8,123,008 |
| **01 ஜனவரி 2022 ஆம் திகதியில் இருப்பு (g)** | | **1,171,875** | **6,644,680** | **4,009** | **(11,421)** | **(67,291)** | **381,156** | **8,123,008** |
| மிகை வரி | 46.6 | - | (172,489) | - | - | - | - | (172,489) |
| **ஆண்டிற்கான விரிவான வருமானம்** | | | | | | | | |
| ஆண்டிற்கான லாபம் (h) | 20 | - | 1,830,524 | - | - | - | - | 1,830,524 |
| **ஆண்டிற்கான பிற விரிவான வருமானம், தொடர்புடைய வரியின் நிகரம்** | | | | | | | | |
| நிதிச் சொத்து விற்பனைக்காக உள்ள நியாயமான மதிப்பின் நிகர மாற்றம் | 21 | - | - | (1,536,428) | - | - | - | (1,536,428) |
| காப்புறுதிதாரர்களின் விற்பனைக்காக உள்ள கையிருப்பு நிதிக்கு மாற்றப்பட்டுள்ள நிதிச் சொத்து நியாயமான மதிப்பின் நிகர மாற்றம் | 21 | - | - | 1,210,123 | - | - | - | 1,210,123 |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் உண்மையான ஆதாயங்கள் | 22 | - | - | - | 33,779 | - | - | 33,779 |
| **ஆண்டிற்கான மொத்த மற்ற விரிவான வருமானம் (i)** | | - | - | (326,305) | 33,779 | - | - | (292,526) |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் (j= h+i)** | | - | 1,830,524 | (326,305) | 33,779 | - | - | 1,537,998 |
| காப்புறுதிதாரர்களின் விற்பனைக்காக உள்ள கையிருப்பு நிதிக்கு மாற்றப்பட்டுள்ள நிதிச் சொத்து நியாயமான மதிப்பின் நிகர மாற்றம் (k) | 23 | - | - | - | - | (1,210,123) | - | (1,210,123) |
| **உரிமையாளர்களுடனான பதிவு செய்யப்பட்டுள்ள நேரடிப் பங்குகளுடன் பரிவர்த்தனைகள் தாய்க் கம்பனியின் உரிமையாளர்களுக்கு விநியோகம்** | | | | | | | | |
| இறுதி இலாபத் தொகை 2021 (l) | 48.4 | | (480,000) | | | | | (480,000) |
| **31 டிசம்பர் 2022 நிலவரப்படி இருப்பு (g+j+k+l)** | | 1,171,875 | 7,822,715 | (322,296) | 22,358 | (1,277,414) | 381,156 | 7,798,394 |

குறிப்பிடப்பட்ட மூலதனமானது 31 டிசம்பர் 2022 இன் படி 150 மில்லியன் சாதாரண பங்குகளை குறிக்கிறது. (2021 - 150 மில்லியன் சாதாரண பங்குகள்)